புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# பண்பாட்டு நோக்கில் பழந்தமிழ் இலக்கியம்

முனைவர் என். ஆர். ஷிபஜா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக் கல்லூரி
திருவிதாங்கோடு

ஆய்வுச்சுருக்கம்

உலகில் மிக தொன்மையான மொழியாக விளங்குவது தமிழ்மொழி. தமிழ்மொழி போல பலபெருமைகளை கொண்டது தமிழ் இனம். உலகிற்கே நாகரிகத்தையும், பண்பாட்டையும் கற்றுக் கொடுத்த பெருமை தமிழுக்கு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். தமிழர்கள் பண்பாட்டை வீரத்திலும் விதைத்து சென்றுள்ளனர். மேலும் தமிழர் கோவில்கள் கல்வெட்டு, உணவு, பழக்கவழக்கங்கள் உடைகள் ஆகியவற்றால் சிறந்து விளங்குகிறது. எனவே தமிழ் வேறு தமிழர் வேறு எனப் பிரிக்கமுடியாமல் தமிழரின் புகழும் தமிழ் இலக்கியங்களின் சிறப்பும் சிறந்து விளங்குகிறது என்பதை அறிய முடிகிறது.

## முன்னுரை

தமிழ்மொழி காலத்தால் முற்பட்டது. பண்பாட்டாலும் பழக்க வழக்கங்களாலும் பண்டையது. வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தது. அக்கால மன்னர்கள் எழுப்பிய அழகழகான வீடுகளும் கால வெள்ளத்தால் இப்பொழுது மறைந்துவிட்டன. ஆனால் அக்கால புலவர்கள் பாடிய பாடல்கள் பழந்தமிழரின் காலச் சிறந்த வாழ்வை விளக்குகின்றன.

## பண்பாடு

உலகத்தின் அமைப்பை முதல் கரு. உரிப்பொருள் என மூன்றாக வகுத்து உலக மக்களின் வாழ்வை அகம், புறம் எனப்பிரித்து அதை இயற்கையுடன் இணைய வைத்ததே பழந்தமிழரின் சிறந்ததொரு பண்பாடாகும். பழந்தமிழர் ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழும் இல்லற வாழ்வையே வீடு பேறு அடையும் நிலையாகக் கருதினர்.

“துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை” (திருக்குறள், டாக்டர் பெ. கிருஷ்ணன் உரை இல்வாழ்க்கை பக்கம் 11 பாடல் 42)

உலகப்பற்றைத் துறந்தவர்க்கும், உண்பதற்கில்லாத வறியவர்க்கும், ஒருவருமின்றித் தன்னிடம் வந்து இறந்தார்க்கும், இல்லறத்தான் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன் துணையலாம் என்று இக்குறள் இல்வாழ்வின் சிறப்பைக் காட்டுகிறது. ஆக வாழ்வை களவு, கற்பு என இருவகைப்படுத்துவர். களவு ஒழுக்கமானது இரண்டு மாதத்திற்கு மேல் நீடிக்கக்கூடாது என்பது மரபு. அகத்திணையில் திருமணவாழ்வு கற்பு என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. திருமணம் ஒரு நல்ல நாளில் நடைபெறும் நிலா ரோகிணியுடன் கூடவும் தீயகோள்கள் இடம் விட்டு விலகவும் விடியற்காலையில் திருமணம் நடைபெறும்.

திருமணமான பிறகு கல்விக்காகவோ, பொருள் தேடுவற்கோ தன் மனைவியை விட்டு பிரிவதும் உண்டு. கல்விக்கான பிரிவு மூன்றாண்டுகளும், மன்னனுடைய கடமைக்காகவோ, பொருள் தேடியோ செல்லும் பிரிவு ஓராண்டுகளும் நீடிக்கும். கல்வி கற்கவும், பொருளீட்டவும் தூது செல்லும் கணவன் பிரியும் போது மனைவி உடன் செல்லும் வழக்கம் இல்லாமலிருந்தது. பெண் போர்ப்பாசறையில் தன் கணவனுடன் தங்குதல் கூடாது என்ற மரபு இருந்தது.

*"எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்" (தொல்காப்பியம் முனைவர் தமிழண்ணல் உரை பக் 212 பாடல் 121) பொருள் தொகுதி 1).*

தொல்காப்பிய வரிகள் அம்மரபை விளக்குகிறது. பழந்தமிழகத்தில் இல்லக்கடமைகள் இன்னினவென வகுக்கப்பட்டிருந்தன.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

(புறநானூறு புலியூர் கேசிகன் உரை பக் 354 பாடல் 312 வரி 1-2)

தம் வருமானத்தைப் பிரித்தளித்து வாழ்வதையே இன்பமாகக் கருதினர். ஆண்கள் பொருளீட்டுவதிலும் அப்பொருள் மூலம் ஏனைய அறங்கள் செய்தும் சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர். இல்லற வாழ்வில் விருந்தினரை எதிர் பார்த்து அவர்களை மகிழ்விப்பதை நம் முன்னோர் கடமையாகக் கருதினர். மதுவையும் விருந்தினருடன் சேர்ந்து அருந்தி மகிழ்ந்தனர்.

"சிறியகட் பெறினே எமக்கீயும் மண்னே
பெரிய கட்பெறினே யாம் பாடத்தாள் மகிழ்ந்து உண்ணும் மண்னே"

(புறநானூறு புலியூர்கேசிகன் உரை பக் 287 பாடல் 235 வரி 1-3)

இப்பாடல் விருந்தை மகிழ்ந்துண்ணும் பண்பாட்டை விளக்குகிறது. இல்லறததில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழம் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பல இருந்துள்ளன.

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தினர் கோடலும்"

(சிலப்பதிகாரம் புலியூர்கேசிகன் உரை முதற்பதிப்பு ஜீன் 1958 பக் 264 பாடல் 16 71 – 73)

இவ்வறங்கள் அனைத்தும் கணவனும் மனைவியும் சேர்ந்து செய்வதோடு மட்டுமல்லாது கணவனைப் பிரிந்த நேரத்தில் பெண்கள் ஒப்பனை செய்வதையம் தவிர்த்து வந்துள்ளனர். மொழிக்கு இலக்கணம் வகுத்த பெருமையைக் கொண்ட தமிழரின் பண்பாடு போற்றத்த்தக்கது.

பழக்க வழக்கங்கள்

உணவு

அரிசி உணவையே பண்டைத் தமிழர் தம் அடிப்படையான உணவாகக் கொண்டனர். தமிழகத்தில் பல வகையான நெல் விளைந்தது. தமிழர்கள் புழுங்கலரிசியை உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

"இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்புமான் அரிசி அமலை வெண்சோறு

(சிறுபாணாற்றுப்படை வித்துவான் ஆ. நாராயணவேலு பிள்ளை உரை பக் 129 பா. வரி 193 – 195)

மாங்கனியைப் பிழிந்து சாறெடுத்து அதைப் புளிக்க வைத்து புளியாகப் பயன்படுத்தினர். பலவிதப் பருப்பு வகைகளையும் ஊனையும் மதுவையும் உண்டு மகிழ்ந்திருந்தனர். மிளகும் புளியும் உப்பும் உணவில் சேர்த்து வந்துள்ளர்;. வெண்ணெயைப் பதமாகச் சூடாக்கி நெய் உடுத்து சோற்றில் சேர்த்து உண்டுள்ளனர். ஊனை நெய்யில் பொரித்து உண்ணும் பழக்கம் காணப்பட்டது. பண்டைத் தமிழர் தம் வாழ்வில் மிகச் சத்தான உணவையே உண்டு வாழ்ந்துள்ளனர்.

உடை

கம்பளி ஆடைகளையும் பஞ்சாலும் பட்டாலும் ஆன ஆடைகளை அணிந்துள்ளனர். சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் தமிழர்களின் முப்பத்தாறு ஆடை வகைகளைக் குறிப்பிடுகின்றனர். பாம்பின் தோல் போலவும் மென்மையான உடைகளை அணிந்து மகிழ்ந்துள்ளனர். குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழும் மக்கள் பூவையும், தழையையும் கோர்த்து ஆடையாக அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். பூந்துகில்கள் வழுவழுப்பாக இருந்ததால் அணிந்தால் வழுக்கிச் சரியும் இயல்புடையதாய் இருந்துள்ளது.

"உடுத்தவை கைவினைப் பொலிந்த காசு சுமை பொலங்காழ் மேல்

*மை இல் செந்துகிர்க் கோவை அவற்றின் மேல் தைஇய, பூந்துகில் தை கழல் ஒரு திரை (கலித்தொகை, மருதக்கலி முனைவர் சுப. அண்ணாமலை பக் 314 பாடல் 85 வரி 3 -5)* உயர் குடியில் பிறந்த ஆண்கள் இடையில் வேட்டியும் மேலாடையும் அணிந்தனர். அரசரும் பணியாளரும் மட்டுமே சட்டை அணிந்திருந்தனர். ஊர் ஊராகச் சென்ற வணிகம் செய்தவர்கள் செருப்பு அணியும் பழக்கம் கொண்டிருந்தனர். ஆடைகளுக்குப் பூவேலைகள் செய்யப்பட்டும் புடவைகளின் முந்தானைகளில் குஞ்சம் கட்டியும் பயன்படுத்தினர்.

''கொட்டைக் கரைய பட்டு உடை நல்கிப்
பெறல் அருங்கலத்தில் பெட்டாங்கு உண்க''

*(பத்துப்பாட்டு வித்துவான் ஆ. நாராயண வேலுப்பிள்ளை பொரு. ஆ. படை பக் 94 பா. வரி 155 – 56)* உறையூரில் மிகமிக மென்மையான மஸ்லீன் துணிகள் நெய்யப்பட்டு வந்ததாகப் பெரிப்புளூஸ் என்ற நூல் கூறுகின்றது. உடை அணிவதில் நாகரித்தோடு வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. பண்டைத் தமிழகத்துப் பெண்கள் ஆடைகளால் மறைக்க முடியாத தங்கள் உடலை அணிகலன்களால் மறைத்தனர். யவனர்கள் கொண்டு வந்த தங்கமும் பகை மன்னரிடம் வென்ற தங்கமும் மண்ணைத் தோண்டி எடுத்த தங்கமும் நாட்டில் எங்கும் மலிந்து கிடைந்துள்ளது. முத்து பவளம் முதலான மணிவகைகளைக் கொண்டு விதவிதமான அணிகலன்களால் தங்கள் உடலை அலங்கரித்தனர். பெண்கள் தங்கள் இடையில் மேகலை, காஞ்சி கலாபம், பருமம், விரிசிகை என ஐவகையான அணிகலன்களை அணிவதுண்டு பெண்கள் தங்கள் காதுகளைத் தொங்கத் தொங்க வளர்க்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். அப்போது அணியும் காதணியின் பெயர் கடிப்பினை ஆகும். கைவளையல்களில் பூத்தொழில் செய்யப்பட்டிருந்தன. கால் விரல்களில் மோதிரம் அணியும் பழக்கம் பண்டைக் காலத்தில் இருந்துள்ளது. கைவளையல்கள் முத்தாலும் அழகுபடுத்தப்பட்டிருந்தன என்பதை எடுத்துரைக்கிறது.

''புல்லாது ஊடிப் புலந்து நின்றவள்
பூ வெழில் வண்ணநீர் பூரித்த வட்டெறிய
வேலெழில் உண்கண் எறிநோக்கம் பட்டபுண்''

*(பரி பாடல் முனைவர் இரா. சாரங்கபாணி உரை பக் 191 பாடல் வரி 67 -69)*

குழந்தைகளுக்கு அணிவித்த அணிகலன்களுக்கு எண்ணிக்கையே இல்லை எனலாம். நெற்றியில் சுட்டி, பிறை, பொன்சங்கிலி , ஐம்படைத்தாலி, புலிப்பல்தாலி, மணியும் பவளமும் கோர்த்த அரைஞாண், இலச்சினை உடைய மோதிரம், சலங்கைகள் எனப்பலவற்றை அணிவித்து அழகு பார்த்தனர்.

உறையுள்

நகரங்களில் மாடி வீடுகள் கட்டப்பட்டன. இதனை வேயா மாடங்கள் என அழைத்தனர். சுட்ட செங்கல்லால் கட்டப்பட்ட இவ்வீடுகளில் மண்டபம், கூடம், தாயகட்டு, அடுக்களை என்று தனித்தனியாகப் பகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகளில் சாளரங்கள் தெற்கு திசை நோக்கி வடிமைக்கப்பட்டிருந்தது. அரண்மனை வாயில்கள் மிக உயரமாக இருந்தன. வெற்றிக் கொடிகளை உயர்த்திக் கொண்டு வீரர்கள் யானைகளின் மேல் அமர்ந்து அவ்வாயில்களின் மூலம் எளிதில் நுழைந்து செல்வர். அரண்மனைகளில் விடிவிளக்குகள் எரிந்து கொண்டே இருந்தது. வீடுகளில் இருந்து சாளரங்கள் மான் கண்ணைப் போல் காட்சியளித்துள்ளது. மாடிகளின் மேல் நிலா முற்றம் அமைக்கப்படடிருந்தது. குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்த மக்கள் சிறு சிறு குடிசைகளில் வாழ்ந்தார்கள். இக்குடிசைகளைக் குரம்பை (சிறு குடில்) என்று அழைத்தனர்.

''அலங்கு செந்நெற் கதிர் வேய்ந்த
ஆய் கரம்பின் கொடிக் கூரை
சாறு கொண்ட களம் போல''

*(புறநானூறு புலியூர் கேசிகன் உரை பக் 52 பாடல் 22 வரி 14 -16)*

குரம்பைச் சுற்றிக் கட்டி மேற்கூரையில் செந்நெற்கதிரால் வேய்ந்திருந்தனர். வரகு, வைக்கோல் கூவையிலை ஆகியவற்றாலும் குடிசைகள் வேயப்பட்டன. வேடர் குடிசையில் நாய்களைச் சங்கலியால் இணைத்துக் கட்டியிருந்தனர். ஆயர்கள் வீடுகளில் வெள்ளாடும், செம்மறியாடும் வளர்க்கப்பட்டன. பூம்புகார் நகரம் சங்க காலத்தில் சிறந்ததாகக் கருதப்பட்டது. நகரின் உட்புறத்தைப் பட்டினப்பாக்கம் என்றும், புறநகரை மரவூர்பாக்கம் என்றும் அழைத்தனர்.

*அந்நகரத்தில் நாளங்காடியும் அல்லாங்காடியும் செழித்தோங்கின. இவ்வாறு உறையுள் பழங்காலத்தில் மிகச் சிறப்பாக விளங்குகிறது.*

*விளையாட்டு*

*குழந்தைகள் முச்சக்கரத்தேர் உருட்டி விளையாடினர். பவளப் பலகையில் இரு யானை பொம்மைகள் ஒன்றையொன்று குத்துவதைப் போல் செய்து விளையாடினர். தெருவில் மணல் வீடு கட்டி விளையாண்டுள்ளனர். சிறுவர்கள் மடுவில் குதித்து தரையில் இருந்து மண் எடுத்து வந்து சிறுமிகளுக்கு வியப்பூட்டி மகிழ்ந்துள்ளனர்.*

*“நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரிய, இப்*
*பொற்றொடி மாதராள் தோள்*
*மல்லல் மழவிடை ஊர்த்தாற்கு உரியவள்”*

*(சிலப்பதிகாரம், புலியூர்க்கேசிகன் உரை முதற்பதிப்பு ஜீன் 1958 பக் 261 பாடல் 1-7)*

*இளைஞர்கள் ஏறுதழுவினார்கள் என்பதற்கு இவ்வரியே சிறந்த சான்று. பழந்தமிழர் விளையாட்டிலும் வீரத்தைக் கொண்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.*

*முடிவுரை*

*தமிழரின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் பார் போற்றியவையே ஆகும். தமிழ் வேறு தமிழர் வேறு எனப் பிரிக்க முடியாத படி வாழ்ந்து வந்தனர். தமிழரின் புகழும் தமிழ் இலக்கியங்களின் சிறப்பும் “குன்றிலிட்ட விளக்கு போல்” என்றும் சிறந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.*


*1. திருக்குறள்* — *டாக்டர். பெ. கிருஷ்ணன்*
*முதற்பதிப்பு ஆகஸ்டு 2003*
*பாவை பப்ளிகேசன்ஸ்*
*142, ஜானி கான் ரோடு*
*இராயப்பேட்டை, சென்னை – 14*

*2. தொல்காப்பியம்* — *முனைவர் தமிழண்ணல் உரை பொருள்*
*முதற்பதிப்பு செப்டம்பர் 2003*
*மணிவாசகர் பதிப்பகம்*
*31, சிங்கர்தெரு பாரிமுனை*
*சென்னை*

*3.புறநானூறு* — *புலியூர் கேசிகன் உரை முதற்பதிப்பு 1958*
*மணிவாசகர் பதிப்பகம்*
*பாரிநிலையம் - 184, பிராட்வே சென்னை – 108*

*4. மேலது* — *புலியூர் கேசிகன் உரை முதற்பதிப்பு 1958*
*மணிவாசகர் பதிப்பகம்*
*பாரிநிலையம் - 184, பிராட்வே சென்னை – 108*

*5. சிலப்பதிகாரம்* — *புலியூர் கேசிகன் உரை முதற்பதிப்பு ஜீன் 1958*
*பாரி நிலையம் 184*
*பிராட்வே, சென்னை – 108*

*6. பத்துப்பாட்டு* — *வித்துவான் ஆ. நாராயண வேலுபிள்ளை உரை*
*முதற்பதிப்பு 1994*
*முல்லை நிலையம் 9,*
*பாரதிநகர், முதல்தெரு*
*தி. நகர், சென்னை – 17*

*7. கலித்தொகை* — *முனைவர் சுப. அண்ணாமலை, முதற்பதிப்பு 2003*
*கோவிலூர் மடாலயம்*
*கோவிலூர் - 630307*

*8. பத்துப்பாட்டு* — *வித்துவான் ஆ. நாராயணவேலுபிள்ளை உரை*
*முதற்பதிப்பு 1994*

முல்லை நிலையம் 9,
பாரதிநகர், முதல்தெரு

9. பரிபாடல் — முனைவர் இரா. சாரங்கபாணி உரை
முதற்பதிப்பு ஏப்ரல் 2003
கோவிலூர், மடாலயம், கோவிலூர் - 630307

10. புறநானூறு — புலியூர் கேசிகன் உரை முதற்பதிப்பு 1958
மணிவாசகர் பதிப்பகம்
பாரிநிலையம் - 184, பிராட்வே – சென்னை - 108

********* ********* ********** ********* ********* ********** ********** **********